கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.
நாள். 10.07.2025.

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**அசல் வழக்கு எண். 145/2019**

2025-ம் ஆண்டு ஜூலை மாதம் 10ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன் | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | பூங்காவனம் | வயது | : | 44 |
| ஊர் | : | கீழ்மட்டை | தொழில் | : | கூலிவேலை |

**பி.வா.சா.1 ( முருகன் ): பிரதிவாதி தரப்பில் முதல் சாட்சியின் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:**

நான் வழக்கில் 9-ஆம் பிரதிவாதியாவேன். எந்த வழக்கில் வாதிகளுக்கு 100 சதுரமீட்டர் சொந்தமானது என்று தீர்ப்பாகியுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. இதே நீதிமன்றத்தில் வாதிகள் தாக்கல் செய்த அசல் வழக்கு எண். 276/2015 வழக்கில் வாதிகளுக்கு 100 சதுரமீட்டர் மட்டும் சொந்தமானது என்று தீர்ப்பாகியுள்ளது என்றால் தெரியாது. மேற்படி வழக்கில் நான் வழக்கறிஞர் வைத்து வாதாடிதான் தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கின் தீர்ப்பாணை பற்றி வழக்கறிஞர் மூலம் கேட்டு தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரிந்து கொண்டேன். வழக்கானது எங்களுக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளது என்று என் வழக்கறிஞர் என்னிடம் தெரிவித்தார். என் பிரமாண வாக்குமூலத்தில் 6-ம் பக்கத்தில் 13-வது பத்தியில் அசல் வழக்கு எண். 276/2015 என்ற வழக்கில் வாதிகளின் தகப்பனாரான முனுசாமி என்பவர் உயிருடன் இருக்கும்போதே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் முனுசாமி என்பவர் வழக்கு நிலுவையில் இருக்குபோதே இறந்துவிட்டார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கிலேயே முனுசாமியின் வாரிசுகளாக வாதிகளை தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றால் சரிதான். மேற்படி வழக்கு முடியும் வரை என் தந்தை பூங்காவனம் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் இறந்த காலஞ்சென்ற முனுசாமிக்கு சர்வே எண். 107/30-ல் 100 சதுரமீட்டர் மட்டுமே விளம்புகை செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்படி வழக்கில் 100 சதுரமீட்டர் கொண்ட இடத்திற்கு நீள அகலமோ, ஜக்குபந்தியோ குறிப்பிட்டு தீர்ப்பு வழங்கப்படவில்லை என்பதால் தான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கின் தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரை ஆகியவற்றை வாங்கி படித்தீர்களா என்றால் இல்லை. மேற்படி தீர்ப்பின் சொத்துவிவரத்தில் ஜக்குபந்தி குறிப்பிட்டுதான் வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 14-ல் குறிப்பிட்டுள்ள அசல் வழக்கு எண். 191/2018 வழக்கு பற்றி தெரியுமா என்றால் தெரியாது. பழனி என்பவர் என் அண்ணன் ஆவார். மேற்படி வழக்கில் பழனி என்பவர் பதிலுரை தாக்கல் செய்துள்ளாரா என்றால் அவர் பதிலுரை தாக்கல் செய்தார். அதில் உள்ள சங்கதிகள் தெரியுமா என்றால் தெரியாது. நான் படித்து பார்க்கவில்லை. அந்த வழக்கில் வாதி தரப்பில் முதல் சாட்சியாக யார் சாட்சியம் அளித்தார் என்றால் தெரியாது. அதில் உள்ள சங்கதிகள் தெரியுமா என்றால் தெரியாது. அசல் வழக்கு எண். 191/2018 என்ற வழக்கில் என்ன தீர்ப்பானது என்றால் தெரியாது. சர்வே எண்.107/30 கொண்ட சொத்தின் பட்டாவானது நடேசன் என்கிற வெள்ளக்கண்ணு என்பவர் பெயரில் உள்ளதா என்றால் சரிதான். நடேசன் என்கிற வெள்ளக்கண்ணு என்பரின் மகன் வழி பேரன்கள் தான் இந்த வழக்கின் வாதிகள் என்றால் சரிதான். பிரதிவாதியாகிய நாங்கள் நடேசன் என்கிற வெள்ளக்கண்ணுக்கு நேரடி வாரிசுகள் இல்லை என்றால் சரிதான். நான் சொல்லியுள்ள சர்வே எண்.107/28,107/29 என் அப்பா பூங்காவனம் பெயரில் உள்ளது, 107/31 என் அம்மா இலட்சுமி பெயரில் உள்ளது, 107/34 என் அண்ணி கவிதா பெயரில் உள்ளது என்றும் அந்த நான்கு பட்டாக்களுக்கு மூலப்பத்திரம் கிடையாது என்றால் சரிதான். இந்த நான்கு பட்டாக்களும் எப்போது எந்த தேதியில் வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. இந்த நான்கு பட்டாக்களும் அசல் வழக்கு எண். 276/2015 நிலுவையில் இருக்கும்போது வழங்கிய பட்டா என்றும் அதனால் அது செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ. 5 -ல் சர்வே எண் குறிப்பிட்டுள்ளதா என்றால் இல்லை. அசல் வழக்கு எண்.191/18 என்ற வழக்கில் இந்த தாவா சொத்து குறித்து எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் தாவா சொத்து ஜக்குபந்திக்காக ஏ செட்டியூலாக அந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கின் தாவா நகல் தான் இவ்வழக்கில் பி.வா.சா. ஆ.1- ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் பரிகாரம் கோரப்பட்ட சொத்துவிவரமும் இந்த வழக்கின் சொத்துவிவரமும் வெவ்வேறு என்றால்

தெரியாது. அசல் வழக்கு எண். 191/2018 என்ற வழக்கின் தீர்ப்பின் மீது சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். சர்வே எண். 107/30 என்ற சொத்தானது கிழக்கு மேற்காக செல்லும் பள்ளிக்கூட தெருவிற்கு தெற்கில் தான் தாவா சொத்து அமைந்துள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கு எண். 276/2015 என்ற வழக்கின் தீர்ப்பில் இதே சொத்துவிவரம் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் தெருவிற்கு தெற்குதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரிதான். சர்வே எண். 107/30-ன் பி.வா.சா.ஆ.8-யான வீட்டுவரி ரசீதானது தாவா சொத்துக்கானது இல்லை என்றால் சரிதான். சர்வே எண். 107/30-ன் பி.வா.சா.ஆ.9-யான மின்கட்டண ரசிதானது தாவா சொத்துக்கானது இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5,6,7-ஆன மூன்று பட்டாக்களுமே தாவா சொத்துக்கானது இல்லை என்றால் சரிதான். இந்த தாவா நிலுவையில் இருக்கும்போது தாவா சொத்தை பிரவேசித்து நான் வீடு கட்டியுள்ளேனா என்றால் முனுசாமியின் தம்பி வேதபுரியின் வாரிசுகள் தான் வீடு கட்டியும் அனுபவித்தும் வருகிறார்கள். நாங்கள் அனுபவிக்கவில்லை. நாங்கள் தான் சொத்தினை அனுபவிக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா நிலுவையில் இருக்குபோது வீடு கட்டியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா நிலுவையில் இருக்கும் போது வீடு கட்டிவிட்டதால்தான் வாதிகள் வழக்கின் தாவாவின் பரிகாரத்தை இடித்து அகற்றி சுவாதீனம் அளிக்க தாவாவை திருத்தி தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண் 107/30-ஐ 107/29ஆகவும், 107/29-ஐ 107/28 எனவும் ரெவின்யூ பதிவேட்டில் தாவா நிலுவையில் இருக்குபோது ரெவின்யூ அதிகாரிகள் துணையுடன் சட்டவிரோதமாக திருத்தம் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. பள்ளிக்கூட தெருவிற்கு தெற்கே உள்ள முதல் வீடு வாதியுடையது என்றும் அதுதான் இந்த வழக்கின் தாவா சொத்து என்று சொன்னால் சரியல்ல. பள்ளிக்கூட தெருவிற்கு தெற்கே உள்ள முதல் வீடு எங்களுடையது. நடேசன் என்கிற வெள்ளைக்கண்ணு வாங்கிய கிரைய பத்திரத்தில் (வா.சா.ஆ.3) தாவா சொத்தானது தெருவிற்கு தெற்கே என குறிப்பிட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நடேசன் என்கிற வெள்ளைக்கண்ணுவிற்கு வழங்கிய பட்டா (வா.சா.ஆ.5) தெருவிற்கு தெற்கு மனைக்கு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த மனைதான் தாவா சொத்து என்றால் சரியல்ல. அசல் வழக்கில் 276/2015 வழங்கிய தீர்ப்பின்படி நீங்கள் தாவா சொத்தின் சுவாதீனத்தை வாதிகளிடம் ஒப்படைக்க கடமைப்பட்டவர்கள் என்று சொன்னால் சரியல்ல.

நீங்கள் நீதிமன்ற தீர்ப்பின் படி தாவா சொத்தின் சுவாதீனத்தை வாதியிடம் ஒப்படைக்ககூடாது என்பதற்காக பொய்யாக வழக்கை நடத்துகிறேன் என்று சொன்னாலும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

**இத்துடன் பி.வா.சா.1 -ன் குறுக்கு விசாரணை முடிவடைகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பாா்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தாா்

K NALEENI Digitally signed by K NALEENI
Date: 2025.07.10 16:41:39 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ)
செய்யாறு